## வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி - 2015

---

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. விரிவானதோர் அறிக்கை 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதியன்று கம்பனியின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 கம்பனியை நிறுவுதல்

---

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் கீழ் 1964 ஆம் ஆண்டில் ஜேர்மன் குடியரசின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை உரக் கம்பனி நிறுவப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களைப் பொதுக் கம்பனிகளாக உருவாக்கும் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க 1992 செப்தம்பர் 15 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு இலங்கை உரக் கம்பனி எனும் பெயரில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு தற்போது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு நடாத்தப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயனுள்ள பயன்பாட்டுக் காலம் 16 ஆம் இலக்க நியமத்தின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததல் ரூபா 78,606,015 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்த போதும், தொடர்ந்தும் அவை பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, மதிப்பிடப்பட்ட குறைபாட்டை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்புக்களினதும் திறைசேரி உண்டியல்களினதும் வட்டி வருமானம் ரூபா 164,141,923 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதனை ரூபா 167,801,299 ஆகக் காட்டியமையால் வட்டி வருமானம் ஆல் ரூபா 3,659,376 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்களது பெறுமதி ரூபா 3,042,587,476 ஆகும். எனினும், சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அது 3,046,991,327 எனக் காட்டப்பட்டு ரூபா 4,403,851 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நாணயக் கடிதத்தின் தீர்ப்பனவு பொருட்டு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட ரூபா 21,366,705,534 நீண்டகாலக் கடன் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) மதிப்பீட்டு வருமானத்தின் கீழ் நிலையான வைப்புக்களாக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 125,399,320 ஆகக் காட்டப்பட்டிருந்த போதும், உள்ளவாறு

பெறப்பட்ட வட்டி ரூபா 120,995,571 ஆகும். எனவே, ரூபா 4,403,749 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மதிப்பீட்டு வருமானத்தின் கீழ் திறைசேரி உண்டியலுக்காக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 29,361,028 ஆகக் காட்டப்பட்டிருந்த போதும், உள்ளவாறு பெறப்பட்ட வட்டி ரூபா 29,022,874 ஆகும். எனவே, ரூபா 338,154 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) வரிச் செலவின் கீழ் உத்தேச வரியின் பெறுமதி ரூபா 3,307,720 ஆகக் காட்டப்பட்டிருந்த போதும், அதன் பெறுமதி ரூபா 3,224,764 இருந்தமையால் ரூபா 82,596 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய மீதிகளாக காட்டப்பட்ட ரூபா 86,408,870 பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தது.

(ஆ) கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை செயற்திட்டத்திற்கெனச் சுவீகரிக்கப்பட்ட 28 பேர்ச் காணியினது உரித்தைச் சமர்ப்பிக்காமையால் பெற வேண்டிய ரூபா 12,600,000 இழப்பீட்டுத் தொகையைப் பெற முடியாதிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றிக்கை மற்றும் 2015 சனவரி 31 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | பல்வேறு பிரசார மற்றும் அனுசரணை செலவினமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,521,000 நோக்கங்களுக்கு முரணாக செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2012 சனவரி 12 ஆந் திகதிய 11/2360/549/034 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | பிரதேசக் களஞ்சியங்களுக்கு அனுப்பப்படும் உரப் போக்குவரத்து செலவினம் தீர்மானிக்கப்படுவதற்கான நடைமுறையைத் தயாரிக்க வேண்டியபோதும் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2009 மார்ச் 25 ஆந் திகதியன்று அமைச்சின் பொருட் கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்த கூறுவிலைகள் அவ்வப்போது போக்குவரத்துக் கூறுவிலைகளை மீளாய்வு செய்யும் குழுவினது பரிந்துரைகள் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பின்னர் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. 7 ஆண்டுகள் கடந்த நிலைமையிலும் அமைச்சினது கொள்வனவுச் சபையின் தீர்மானத்தைப் பெற்று கூறுவிலைகள் |

| | | |
|---|---|---|
| | | மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய 02/2015 ஆம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | தொழிற்படு பணிப்பாளர் ஒருவருக்கு வரியுடன் சேர்த்து வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் ரூபா 10,000 ஆகும். எனினும், தொழிற்படு பணிப்பாளர் ஒருவருக்குக் கம்பனி மாதாந்தம் தொலைபேசிக் கட்டணமாக ரூபா 12,000 வீதம் வழங்கியிருந்தது. |
| (ஈ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் ஊழியர் சேமலாப நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 28,999,236 ஆகும் சம்பாத்தியமாகச் சேர்த்துக் கொள்ளப்பட முடியாத இடைக்காலப் படி மற்றும் விசேட படிகளும் உள்ளடக்கப்பட்டு ஊழியர் சேமலாப நிதியம் வழங்கப்பட்டிருந்தது. |

**2.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களில் அனுசரணை மற்றும் உதவியாக ரூபா 300,000 பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனிக்குச் சொந்தமாக 03 ஜீப் வண்டிகளும் 03 கெப் வண்டிகளும் இருக்கையில், கம்பனி தொழிற்படு பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 95,000 மாதாந்த வாடகையில் ஹைபிரிட் மோட்டார் வாகனம் ஒன்று பெறப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 1,485,813 செலவிடப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 836,604,005 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 520,200,738 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான இலாபத்தில் ரூபா 316,403,267 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 406,779,899 ஆல் அதிகரித்தமையும் விநியோகக் கிரயம் ரூபா 43,695,688 குறைவடைந்தமையும் இவற்றிற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011/2012 ஆம் ஆண்டில் ரூபா 159,544,495 ஆகவிருந்த மிகை 2015/2016 ஆம் ஆண்டளவில் ரூபா 836,604,005 வரை தொடர்ச்சியாக அதிகரிப்புக்குள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ஊழியர்களது ஊதியம், பெறுமானத்தேய்மானத்திற்கான நிதியேற்பாடு, அரசாங்கத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட வரி என்பவற்றைக் கவனத்திற் கொள்ளுமிடத்து 2011/2012 ஆம் ஆண்டில் ரூபா 281,337,813 ஆகவிருந்த கம்பனியின் பங்களிப்பு 2015/2016 ஆம் ஆண்டளவில் ரூபா 1,172,751,116 வரை தொடர்ச்சியாக அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இசைவாக இலங்கை கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் துறையின் வருமானத்தையும் இலாபத்தையும் அதிகரித்தல் தொடர்பாக பல்வகை சந்தைத் தேவைகளுக்கு ஒத்துப்போகும் உரத்தை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தலின் வாயிலாக கம்பனியின் இலாபத் தன்மையை நிரந்தர நிலையில் இருப்பதை உறுதி செய்யும் செயற்பணியின் கீழ் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) குத்தகை வாடகையைச் செலுத்தும் 8 களஞ்சியங்களில் 3 இன் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 3 மாதங்களுக்கு மேற்பட்டிருந்தபோதும், புதிய உடன்படிக்கைகளில் ஈடுபடாதிருந்ததுடன், 4 பிரதேச களஞ்சியங்களினது உடன்படிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருக்கவுமில்லை. உரித்து நிலை உறுதிப்படுத்தப்படாத 13 இடங்களில் உரக் களஞ்சியங்களைப் பேணிவந்ததுடன், அக்கட்டிடங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக குத்தகை உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(ஆ) முறையான நிதி முகாமைத்துவம் இல்லாமையால் மக்கள் வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கிலிருந்து வங்கி மேலதிகப் பற்றைப் பெற்றுக்கொண்டமையால் மீளாய்வாண்டின் போது வங்கி மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 1,726,619 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கம்பனியின் உரக் களஞ்சியங்களில் 38 வகையான 676.48 மெற்றிக் தொன் உரம் அசைவின்றி காணப்பட்டதுடன் ரூபா 2,014,431 பெறுமதியான இந்த உர இருப்பிற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடவசதிகளும் பயனற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.4 இழப்புகளும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின்போது மாதம்பிட்டி பிரதேச களஞ்சியத்தில் ஏற்பட்ட கையிருப்புக் குறைவின் காரணமாக ஏற்பட்ட ரூபா 2,382,510 இழப்பில் தொடர்ந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 714,753 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின்போது பெலவத்தை பிரதேச உரக் களஞ்சயத்தில் ஏற்பட்ட கையிருப்புக் குறைவு காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 336,772 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 104,940 கையிருப்பு உத்தியோகத்தரால் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா 231,832 அறவிடப்பட வேண்டியிருக்கையில் திருகோணமலை பிரதேச களஞ்சியத்தின் இருப்பு உத்தியோகத்தராக அவர் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன், இது சம்பந்தமாக 2015 திசெம்பர் 14 ஆந் திகதி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு 2016 ஜுலை 08 ஆந் திகதியளவிலும் பரிசோதனை முடிவுறாதிருந்தது.

(இ) பொத்துவில் உரக் களஞ்சியத்தின் கையிருப்பு உத்தியோகத்தரால் உர விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 21,382,468 தொகையை வங்கியில் வைப்புச் செய்யாமை மற்றும் கையிருப்புக் பற்றாக்குறை ஏற்படுத்தியதன் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 15,629,218 ஆகும். இவ்விழப்பை அறவிடுவதற்கு

2016 ஜுலை 08 ஆந் திகதியளவிலும் சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

விவசாய அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 17,617,653 பெறுமதியான இரசாயனகூட உபகரணங்கள் மற்றும் தகைமை வாய்ந்த பதவியணியினரை உள்ளடக்கிய தரமான இரசாயனகூடம் ஒன்றும் கம்பனியிடம் உள்ளது. எனினும், உரச் செயலகத்தால் கூடிய கட்டணத்தைச் செலுத்திய வெளி நிறுவகங்களிடமிருந்து உரத்தின் மாதிரிகளின் தன்மையை பரிசோதனை செய்யப்படுவதால் இச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

### 4.6 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின்போது நுவரெலியா சுற்றுலாவிடுதியை நிர்மாணிப்பதற்கென ரூபா 27,998,598 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டுத் தொகையிலும் கூடுதலாக ரூபா 1,474,655 மேலதிக வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அதன் பொருட்டுக் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.2 ஆம் பந்தியின் பிரகாரம் உசாத்துணைக் கம்பனி ஒன்றிடமிருந்து வேலை முடிவடைந்ததற்கான சான்றிதழ் பெறப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கம்பனியின் தலைமை அலுவல வளவிலுள்ள வீதிகளில் தார் பூசுவதற்கு ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வங்கிப் பிணை முறியின் மீது ரூபா 8,859,708 வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பின்னர், ஒப்பந்தகாரர் வேலையை இடைநிறுத்தியிருந்ததுடன், வங்கிப் பிணை முறியின் செல்லுபடிக் காலத்திற்குள் கொடுப்பனவு செய்த தொகையை மீளப் பெறுவதற்கு கம்பனி தவறியிருந்தது.

### 4.7 வெளிப்படையான மோசடிகள்

மாவட்டக் களஞ்சியங்களுக்கு உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக ஊழியர்களைப் பயன்படுத்தியதாகத் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ரூபா 1,324,679 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப்போலியான வருகை மற்றும் செல்கை இடாப்புகள் கம்பனியின் உத்தியோகத்தர் ஒருவரால் தயாரித்து வழங்கப்பட்டுமிருந்தது. இந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.8 பதவியணியிளர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) கம்பனி முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனி, வரம்பை மீறி 63 ஊழியர்களை பணியில் அமர்த்தி இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கம்பனியின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் ஊழியர் நிர்வாகம் என்பன சம்பந்தமாக கம்பனியால் தயாரிக்கப்பட்ட பதவியணி நடைமுறையில் காணப்படாத விதிகளை அமுல்படுத்துவதற்கு 2014 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய கம்பனிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதற்குத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

கடமை நாட்கள், நேரம், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு, விடுமுறை மற்றும் படிகளை வழங்குதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது கம்பனிக்குப் பொருத்தமாகவுள்ள கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்தினையும் மிகைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.9 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்**

கம்பனியிலிருந்து சம்பளத்தைப் பெறும் விநியோகப் பிரிவின் தொழிலாளி ஒருவர் 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் சனாதிபதி அலுவலகக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டபோதும் அதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 ஆண்டறிக்கை**

2002 மே 24 ஆந் திகதிய PF/PE/21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015/2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டிற்குள்ளான 79 விடயங்களது வருமானம் மற்றும் செலவினங்களில் 23 முதல் 1654 சதவீதம் வரையிலான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | கம்பனியின் நோக்கம் நிறைவேறும் விதத்தில் செலவுகளை மேற்கொள்ளவும் எழுத்துமூல ஆவணங்களுடன் கொடுப்பனவை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) பதவியணியினர் கட்டுப்பாடு | முறையான பதவியணி நடைமுறை திறைசேரியால் அங்கீகரிக்கப்படாததுடன் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டம், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) பிரதேச களஞ்சியங்களில் உரப் போக்குவரத்து நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) குத்தகை வாடகையில் பெறப்பட்ட பிரதேசக் களஞ்சியங்கள் குறித்த உடன்படிக்கைகளுக்குரிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரதேச உரக்களஞ்சியங்களில் உள்ள கையிருப்பும் நிதி நிலைமையும் பேணப்படும் விதத்தில் உள்ளகக் கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.